**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 126** **நாள்: 28.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை தொடங்குவதற்கு முன் தூர்வாரப்பட வேண்டிய மழைநீர் வடிகால்களை ஆய்வுசெய்து பணிகளை மேற்கொள்ளவும், நடைபெற்று வரும் சாலைப்பணிகளை உடனடியாக முடிக்கவும் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு !!**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை காலத்திற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 27.08.2019 அன்று அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆணையாளர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து சாலைகளில் சுமார் 2,056 கிலோ மீட்டர் நீளமுள்ள 8,725 மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பருவமழை துவங்குவதற்கு முன்பாக இந்த மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும். மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி சுழற்சி முறையில் மழைக்காலங்களில் இரண்டு முறை செயலாக்கப்பட வேண்டும்.

தூர்வாரப்பட வேண்டிய மழைநீர் வடிகால் இடங்களை உதவி செயற்பொறியாளர்கள் 100 சதவீதம் நேரடியாக சென்று ஆய்வு செய்ய வேண்டும். இப்பணிகளை செயற்பொறியாளர்கள் மற்றும் வட்டார துணை ஆணையாளர்கள் அவ்வப்பொழுது மேற்பார்வையிட வேண்டும். களஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்பு தூர்வாரப்பட வேண்டிய பணிகளுக்கு தேவையான நிர்வாக அனுமதியினை சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையாளர்களிடம் பெற்று பணிகளை உடனடியாக துவங்க வேண்டும்.

தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களை புகைப்படம் எடுத்து சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். தூர்வாரப்பட்ட கழிவுகளை கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் இதற்கென தனியாக குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மட்டுமே கொண்டு சேர்க்க வேண்டும்.

மேலும், கடந்த காலங்களில் மழைநீர் தேங்கிய இடங்கள் குறித்த விவரங்கள் அடிப்படையில், அவ்விடங்களில் சிறிய அளவிலான மழைநீர் உறைகிணறுகளை அமைக்கும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளையும் பருவமழைக் காலத்திற்கு முன்னதாகவே விரைந்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் இல்லாத சுமார் 60,000

கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இதேபோன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2,734 உட்புறச் சாலைப்பணிகள் முடிவுற்றுள்ளன. சுமார் 640 பணிகள் நடைபெற்று வருகின்றன. 312 பணிகள் துவங்கப்படும் நிலையில் உள்ளன. இப்பணிகளை செப்டம்பர் மாதம் 15ம் தேதிக்குள் முடித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இப்பணிகள் முடிவுற்ற பிறகு மழைக்காலங்களில் பணி மேற்கொள்ளப்பட்ட இடங்களில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது மழைநீர் தேக்கம் இருந்தால் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர்கள் திரு.என்.மகேசன், திரு.எல்.நந்தகுமார், திரு.பி.துரைசாமி, திரு.எஸ்.காளிமுத்து, மேற்பார்வை பொறியாளர்கள், மண்டல செயற்பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**